

இந்திய ஒன்றியத்தின் நம்பர் 1 மாநிலமாகத் திகழும் தமிழ்நாட்டினை, அடுத்தகட்ட வளர்ச்சியை நோக்கி உயர்த்தும் வகையில், நாள்தோறும் மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்தி வரும் நம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடைய பிறந்த நாளை முன்னிட்டு, சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதி, சேப்பாக்கம் பகுதி, 63அ கழக வட்டம், செல்லப்பிள்ளையார் கோயில் தெரு நைனியப்பன் தெரு சந்திப்பு பகுதியில், 1000 பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் வழங்கினார். அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தயாநிதி மாறன் எம்.பி., மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., பகுதிச் செயலாளர் எஸ்.மதன்மோகன் உள்ளிட்டோர் உடன் உள்ளார்கள்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடைய பிறந்த நாள் மார்ச் 1 அன்று வரவுள்ள நிலையில், சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதி மக்கள் மகிழும் வண்ணம் நல உதவிகளை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கி வருகிறார். இதன் ஒரு பகுதியாக, சேப்பாக்கம் பகுதி, 114ஆவது வட்டக்கழகம், மேயர் சிட்டி பாபு தெரு பகுதியைச் சேர்ந்த 1000 குடும்பங்களுக்கு நலத்திட்ட உதவிப்பொருட்களை நேற்று முன்தினம் வழங்கினார். தயாநிதி மாறன் எம்.பி., மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, சி.எச்.சேகர் உள்ளிட்டோர் உடன் உள்ளார்கள்.




முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய நூற்றாண்டை போற்றும் விதமாக கழகத்தின் முதன்மை அணியாம், இளைஞர் அணி சார்பில் 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் கலைஞர் நூலகங்களைத் திறந்திட கழகத்தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டார்கள். அந்த வகையில், சென்னை வட கிழக்கு மாவட்டக்கழகம், மாதவரம் சட்டமன்றத் தொகுதிக்கான கலைஞர் நூலகத்தை, குமரன் நகர் பேருந்து நிறுத்தம் அருகே துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் திறந்து வைத்தார். மேலும் “மாதவரம் தொகுதி மாணவர்கள், இளைஞர்கள், பொதுமக்கள் கலைஞர் நூலகத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். வாசிப்பின் வழியே அறிவுச்சிறகை விரித்து வாழ்வில் உயரப் பறக்க வாழ்த்துகிறோம்” என்று பதிவிட்டுள்ளார். அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாவட்டச் செயலாளர் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., ஆர்.டி. மதன்குமார் உள்ளிட்டோர் உடன் உள்ளார்கள்.




சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரத்தில் கழக இளைஞர் அணி சார்பில் கலைஞர் நூலகத்தை நேற்று முன்தினம் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்து, மாற்றுத்திறனாளிகள் மற்றும் மருத்துவ உதவி தேவைப்படுவோர் என மொத்தம் 10 பேருக்கு இளைஞரணி சார்பில் நிதி உதவி வழங்கினார். மேலும், கழக இளைஞரணி சார்பில் பாகத்திற்கு ஒரு இளைஞரைத் தேர்வு செய்து சமூக வலைதள பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட இளைஞர்கள், சமூக வலைதளத்தில் ஆற்றலுடன் இயங்குவதை உறுதி செய்திட முதற்கட்டமாக ஐந்து பேருக்கு TAB கருவிகளை வழங்கினார். மாவட்டச் செயலாளர் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., ஆர்.டி.மதன்குமார் உள்ளிட்டோர் உடன் உள்ளார்கள்.

### சென்னை – மாதவரம் தெற்குப் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்

# ஏ.வி.அருண் - சுஷ்மிதா மொகந்தி திருமணம்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நடத்தி வைத்தார்!

சென்னை, பிப்.25-

**சென்னை, வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்குப் பகுதி இளைஞர் அணித் துணை அமைப்பாளர் ஏ.வி. அருண் சுஷ்மிதா மொகந்தி இணையரின் சுயமரியாதைத் திருமணத்தை, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மாதவரத்தில் நேற்று முன்தினம் நடத்தி வைத்தார்.**

**அப்போது அவர், இல்வாழ்வில் அடியெடுத்து வைக்கின்ற மணமக்கள் அருணும் சுஷ்மிதாவும், பெரியாரும் பகுத்தறிவும் போல, அண்ணாவும் இருமொழிக்கொள்கையும் போல, கலைஞரும் கழகமும் போல, தலைவர் அவர்களும் திராவிட மாடலும் போல பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தினார்.**



சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஏ.வி.அருண் – சுஷ்மிதா மொகந்தி இணையரின் திருமணத்தை மாதவரத்தில் நேற்று முன்தினம், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்தி வைத்தார். அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாவட்டச் செயலாளர் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ உள்ளிட்டோர் உடன் உள்ளனர்.

அவர் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:-

மாதவரம் தெற்குப் பகுதி இளைஞர் அணித் துணை அமைப்பாளர் தம்பி ஏ.வி. அருண், சுஷ்மிதா மொகந்தி திருமணத்தை உங்கள் முன் நடத்தி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். உங்கள் அனைவரின் சார்பாக, மணமக்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக, இந்தத் திருமணம் மாலைநேரத்தில் சுயமரியாதைத் திருமணமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது காதல் திருமணம் என்று, வரும்போது கேள்விப்பட்டேன். அதற்கும் இந்த நேரத்தில் மணமக்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

### திருமண வாழ்க்கை

10 ஆண்டுகளுக்கு மேல் மாப்பிள்ளையும், பெண்ணும் காதலித்துப் போராடி, இன்றைக்கு பெற்றோர்கள் சம்மதத்தோடு இந்தத் திருமண வாழ்க்கையில் வெற்றிகரமாக அடியெடுத்து வைக்கிறார்கள் என்று சொன்னார்கள்.

காதல் திருமணங்களுக்கு வீட்டில் சம்மதம் வாங்குவது எவ்வளவு பெரிய கஷ்டம் என்று எனக்குத் தெரியும். பெண் வீட்டார்கள் ஒப்புக்கொண்டால், மாப்பிள்ளை வீட்டார்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். கஷ்டப்பட்டு இரண்டு வீட்டார்களையும் ஒப்புக் கொள்ள வைத்துவிட்டால், உறவினர்கள் ஏதாவது ஒரு பிரச்சினையைக் கிளறிவிடுவார்கள். இவ்வளவு பிரச்சினையையும் தாண்டி சகோதரர் அருண் அவர்களும், சகோதரி சுஷ்மிதா மொகந்தி அவர்களும் இன்றைக்கு திருமண வாழ்க்கையில் அடியெடுத்து வைத்து இருக்கிறார்கள்.

தம்பி அருணுக்கு இந்த நேரத்தில் ஒரு விஷயத்தை சொல்ல விரும்புறேன். நீங்கள் எப்படி உங்கள் காதலுக்காக எந்தத் துன்பத்துக்கும் எப்படி தயாராக இருந்தீர்களோ அதைப்போலவே அரசியல் களத்திலும், வருகின்ற சட்டமன்றத் தேர்தலிலும் தன் உழைப்பைக் காட்ட வேண்டும்.

### கழகக் கூட்டணி வெற்றி

நம் கழகத்தலைவர் அவர்கள் நமக்கு ஒரு இலக்கு கொடுத்துள்ளார். வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் குறைந்தது 200 தொகுதிகளுக்கு மேல் நம் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணி வெற்றி பெற வேண்டும். கழகத்தலைவர் முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 7வது முறையாக கழகம் ஆட்சி அமைக்க வேண்டும் என்றால், சகோதரர் அருண் போல அனைத்து இளைஞர் அணி அமைப்பாளர்களும் அரசியல் களத்தில் இறங்கிப் பணிகளை ஆற்ற வேண்டும். கழக ஆட்சியின் சாதனைகளை மக்களிடம் எடுத்துச்செல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய அரசியல் சூழ்நிலை என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று, உங்களுக்கு நன்றாகத் தெரியும். அதனால்தான் நம் பள்ளிக் கல்வித்துறை அமைச்சரையும் கையோடு அழைத்து வந்துள்ளேன். அவருக்கு வரவேண்டிய 2,100 கோடி ரூபாயை ஒன்றிய அரசு தர மறுத்துவிட்டது. காரணம், மும்மொழிக்கொள்கை. இந்தியைக் குறுக்கு வழியில் நம்மிடம் திணித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

### அனுமதிக்க மாட்டோம்

நாம் 2,100 கோடி ரூபாய் என்று நினைத்துக்கொண்டு இருந்தோம். ஆனால், இன்றைக்கு ஒன்றிய அமைச்சர் சொல்கிறார் 2,100 கோடி ரூபாய் இல்லை, நீங்கள் இந்தியைக் கற்றுக்கொள்ளவில்லை என்றால், 5,000 கோடி ரூபாயைத் தர மாட்டேன் என்று ஒன்றியக் கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்கள் மிரட்டி (பிளாக்மெயில்) பார்க்கிறார். நம் தலைவர் அவர்கள் சொல்லிவிட்டார் 5,000 கோடி ரூபாய் இல்லை நீ 10,000 கோடி ரூபாய் கொடுத்தாலும், நாங்கள் எந்த வகையிலும், இந்தித் திணிப்பை அனுமதிக்க மாட்டோம். எந்த மொழிக்கும் எதிராக திராவிட முன்னேற்றக் கழகம் கிடையாது. இந்தி மொழியை நம்மீது திணித்தார்கள் என்றால், நாம் அதற்கு என்றைக்கும் ஒப்புக்கொள்ளமாட்டோம்.

மணமக்கள் இருவரும் நன்கு படித்தவர்கள். இன்னும் சொல்லப் போனால் அழைப்பிதழில் பார்த்தேன் மணமகனை விட மணமகள் அதிகம் படித்திருக்கிறார். நல்ல நண்பர்களாக சுயமரியாதையுடன் இருவரும் விட்டுக்கொடுத்து வாழ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

### மகிழ்ச்சியாக வாழ வேண்டும்

தந்தை பெரியாரும், சுயமரியாதையும் போல, பேரறிஞர் அண்ணாவும் தமிழ்நாடும் போல, தலைவர் கலைஞரும் தமிழும் போல, நம் தலைவரும் உழைப்பும் போல மணமக்கள் இருவரும் சிறப்பாக மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உங்கள் அனைவரின் சார்பாக, மணமக்களுக்கு ஒரு வேண்டுகோள். உங்களுக்குப் பிறக்கிற குழந்தைக்கு நல்ல தமிழ்ப்பெயர் சூட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உங்கள் அனைவரின் சார்பாக, மணமக்களை மீண்டும் வாழ்த்தி, சிறப்பான வரவேற்பை அளித்த அண்ணன் சுதர்சனம் அவர்களுக்கு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, ஆவடி நாசர், சென்னை வடகிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான மாதவரம் சுதர்சனம், சென்னை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் ஆர்.டி.சேகர், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் எஸ்.ஜோயல், அப்துல் மாலிக், மற்றும் டி.கே.எஸ்.இளங்கோவன், சட்டமன்ற உறுப்பினர்கள் கே.பி.சங்கர், எபினேசர், எம்.கே.மோகன், மாவட்டக் கழக நிர்வாகிகள் குறிஞ்சி கணேசன், இராமகிருஷ்ணன், இராஜேந்திரன், அறிவழகி பாலகிருஷ்ணன், ஆனந்தன், திருவள்ளூர் கிழக்கு மாவட்டப் பொருப்பாளர் எம்.எஸ்.கே.ரமேஷ், பகுதிக் கழகச் செயலாளர்கள் துர்காராம், புழல் நாராயணன், தனியரசு, அருள்தாஸ், ஆறுமுகம், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் கருணாகரன், தயாளன், அற்புதராஜ், இராஜேந்திரன், கவி கணேசன், டாக்டர்.சந்திரபோஸ், பத்மநாபன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் ஆர்.டி.மதன்குமார், வழக்கறிஞர் பிரகாஷ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் சீனிவாசன், மோரை சதீஷ்குமார், கேபிள் கணேசன், டி.ஜி.ஆர். மணிவண்ணன், ஜி.கே.இனியன், தனசேகர், வட்டக்கழகச் செயலாளர் கே.பி.சுந்தரேசன், கழக மாணவர் அணித் தலைவர் ராஜீவ்காந்தி, ஐ.டி. விங் துணைச் செயலாளர் சி.எச்.சேகர், உதயசூரியன் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.